**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08012023-6627

Volume: 8

Issue: 1

Month: July

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 17.04.2023

Accepted: 05.06.2023

Published: 01.07.2023

Citation:
Vasuthavan, Naveenkumar. "Pattinattar's Thoughts on Human Life and Its Complex Dimensions." *Shanlax International Journal of Tamil Research*, vol. 8, no. 1, 2023, pp. 42–46.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i1.6627

*Corresponding Author:
kvnaveenbharathi@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Pattinattar's Thoughts on Human Life and its Complex Dimensions

**Naveenkumar Vasuthavan**
*Master's Degree Candidate, Department of Indian Studies*
*Faculty of Arts and Social Sciences, University of Malaya, Kuala Lumpur, Malaysia*
*http://orcid.org/0009-0004-5332-7207*

**Abstract**

Pattinattar also known by his given name Thiruvenkaadar was a great saint and renown poet of Tamil Nadu. He sang many philosophical songs to enlighten people on the blissful state of renunciation. His work focused on the human life and its complex dimensions and he insisted repeatedly not to be attached to the body and its pleasures. Pattinattar"s poetry is full of strong and pathetic statements of the uncertainty of human life and of the folly of the pursuit of riches. Thus, this article explores the impermanence of life, the impermanence of human body, the impermanence of youth, the impermanence of wealth, the importance of sense control and the burden of birth as taught by Pattinattar in hishymns.

**Key Words:** Pattinattar, Philosophical Songs, Uncertainty of Human Life

## References

1. Azhagar Nambi. 2016. Pattinathar Vazhvum Vaakkum. Chennai, Thirumagal Nilayam.
2. Karuppaiya, P. 2012. Pattinathar Oru Parvai. Chennai,Kizhaku Pathippagam.
3. Parasuraman, P. N. 2010. Sithargal Vazhkai. Chennai, Vikatan Pirasuram.
4. Ponmaniselvan, K. 2014. Pattinathar Thattuvam. Chennai, Alagu Pathippagam.
5. Sasireka, P. 2022. Pattinathar Paadalgalil Sittandha Kolgaigal. International Journal of Tamil Language and Literary Studies, 5(1), 38-47.
6. Senthil Kumar, C. 2013. Pattinathar Varalaarum Paadalgalum. Chennai, Balaji Pathippagam.
7. Sethupillai, R.P. 2007. Kadarkaraiyile. Chennai, Palaniappa Brothers.
8. Subbu Reddiar, N. 2003. Pattinathadigal. Chennai, Kalaignan Pathipagam.
9. Thangavel, T. 2013. Sithargalin Thattuva Marabu. Chennai, Bharathi Puthakalayam.
10. Thiru, V. K. 2010. Pattinathar Padalgal Viruthiyurai. Chennai, Palaniappa Brothers.
11. Vengadesan, V. S. 2019. Pathinathaar. Chennai, Santhi Nilayam.

# பட்டினத்தார் பாடல்களில் உலகியல் சிந்தனைகள்

***நவீன்குமார் வாசுதேவன்***
முதுகலைப் பட்ட ஆய்வாளர், இந்திய ஆய்வியல் துறை
கலை மற்றும் சமூக அறிவியல் புலம்
மலாயாப் பல்கலைக்கழகம், கோலாலம்பூர், மலேசியா

***ஆய்வுச் சுருக்கம்***
*மனிதனாய்ப் பிறந்து மனிதனாய் வாழ்ந்து மனிதனாய் மடிந்தவர்களுக்கு மத்தியில் மனிதனாய்ப் பிறந்து சித்த நிலையை அடைந்து இறைநிலையை எய்தியவர்கள் சிலரே. அத்தகைய சிலரிலும் வெகுசிலராக சித்தர் உலகு கண்டு வியக்கும் அருஞ்சுவடாய் இன்றளவும் பிரகாசிப்பவர் பட்டினத்தாராவார். காதற்ற ஊசியும் வாராது காண்கடை வழிக்கே எனப் பிரவேசித்த இவரின் ஞான முதிர்ச்சியானது உலகியல் சிந்தனைகளைப் பலவாறாக எடுத்தியம்பியுள்ளன. அறிவையும் அனுபவத்தையும் ஒரு சேர இணைத்து மெய்யுணர்வின் மிகுதியால் மனித இனம் சிறக்க இவர் அருளிய பாடல்கள் ஏராளம். வாழ்க்கை என்பது கானல் நீரைப் போன்றது என்பதும், மனிதனின் உடல், இளமை, செல்வம், முதலிய அனைத்தும் மாறுதல்களுக்கு உட்பட்டது என்றும் பட்டினத்தார் தெள்ளிதின் கண்டுரைத்துள்ளார். அவ்வகையில், இவரது படைப்புகள் உலகியலையும் மனித தன்மையையும் உணர்த்துவதாக அமைந்து வாழ்க்கை நிலையாமை, யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, பிறவித் துன்பம், புலனடக்கம் ஆகிய சிந்தனைகளைப் புலப்படுத்துவதாய் அமைகின்றது.*
***திறவுச்சொற்கள்:*** *சித்தர், பட்டினத்தார், உலகியல் சிந்தனைகள்*

## முன்னுரை

சித்தர் உலகில் தலையாய இடம் வகிப்பவர் பட்டினத்தார் ஆவார். அவர்தம் பாடல்கள் யாவும் உலகில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் உள்ளபடியே விளக்குவதாக அமைகின்றன. வாழ்க்கை எவ்வாறெல்லாம் இருக்க வேண்டும்; வாழ்க்கை எவ்வாறெல்லாம் இருக்கக்கூடாது என்பவற்றை பல்வேறு கோணங்களில் நோக்கி மக்களுக்கு அறிவுறுத்தும் கருத்துப்பெட்டகமாக அவரின் பாடல்கள் விளங்குகின்றன. இதன் அடிப்படையில் இக்கட்டுரையானது, பட்டினத்தார் ஆய்ந்துரைத்த வாழ்க்கை நிலையாமை, யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, புலனடக்கம், பிறவிச்சுமை ஆகிய உலகியல் சிந்தனைகளைப் புலப்படுத்துவதாய் அமைகின்றது.

## வாழ்க்கை நிலையாமை

வாழ்க்கை நிலையாமை உடையது. அனுதினம் மாற்றங்களுக்கு உட்படுவது; இங்குக் காணும் பெரும்பாலானக் கூறுகள் உண்மையைப் போல காட்சியளிக்கும் போலிகள். வாழ்க்கைமாயையும் போலியும் கலந்த நிலைத்தலில்லாதவை என்பது பட்டினத்தார் கூற்றாகும். இக்கருத்து,

**மெய்யா இருந்தது நாள் செல**
**நாள் செல வெட்ட வெறும்**
**பொய்யாய்ப் பழங்கதையாய்க்கன**
**வாய்மெல்லப் போனதுவே**

**(தலங்களைப் பற்றிய பாடல்கள்: பொது : 52)**

என்ற பாடல் வரிகளால் அறியப்படுகின்றது.

**யாக்கை நிலையாமை**

ஓர்ஆன்மா பிறப்பெடுக்க உடலின் பங்கு அளப்பறியது. உடலின்றி உயிரின் தன்மையை இங்குக் காணலாகாது; ஆயினும், இத்தகைய உடலானது இறுதி வரை வாராது என்பதே உண்மை. நிலைமை இவ்வாறிருக்க மனித இனத்தின் செயல்பாடுகள் இந்நிலவுலகில் தலைக்கீழாகக் காட்சியளிப்பதைப் பட்டினத்தாரின் பாடல் பதிவேற்றுகிறது. அழியப் போகும் உடலின் பால் அதீதப் பற்று கொண்டு அதனுள் இருக்கும் ஆன்மாவை மறந்து, உலக ஆசையில் உழன்று இறைவனை எண்ணாது இருக்கும் இந்நிலையை எண்ணி பட்டினத்தார் வருந்துகிறார். இக்கருத்து,

**நாறும் உடலை நரிப்பொதி**
**சோற்றினை நான் தினமும்**
**சோறும் கறியும் நிரப்பிய**
**பாண்டத்தைத் தோகையர் தம்**
**கூறும் மலமும் இரத்தமும்**
**சோரும் குழியில் விழாது**
**ஏறும்படி அருள்வாய் இறை**
**வா கச்சி ஏகம்பனே**

**(திருஏகம்பமாலை : 34)**

என்னும் பாடல் பொருந்தியிருக்கக் காணலாம்.

**இளமை நிலையாமை**

வாழ்க்கை என்னும் பெருங்கடலில் இளமையும் முதுமையும் இரு நதிகளாகப் பறைசாற்றப்படுகின்றன. இளமையில் வலிமையும் முதுமையில் தடுமாற்றமும் தாண்டவமாடுவது இயல்பு. இளமைப் பருவத்தின் நிலையாமையை உணராது மானிடர்கள் உலக ஆசையைத் துய்க்க சிற்றின்பத்தில் மூழ்குகிறார்கள். மண், பெண், பொன் ஆகிய மூவாசைகளைக் குறிக்கோளாய் வைத்து தவறிழைப்பதும் நெறிதவறுவதும் வழக்கமாகின்றது. பேரின்பம் எட்டாக்கனியாயக் காட்சியளிக்கிறது.

இதைக் கண்டு மனம் நொந்த நிலையில் இளமைப் பருவம் நிலையற்றது என்பதையும் உடலில் வலு இருக்கும்போதே அதைக் கொண்டு பரப்பொருளை அடைய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் பட்டினத்தார் பாடுகின்றார். இத்தகைய உலகியல் கருத்து,

**பிறந்து மண்மீதில் பிணியே**
**குடிகொண்டு பேரின்பத்தைத்**
**மறந்து சிற்றினபத்தின் மேல்மய**
**லாகிப்புன் மாதருக்குள்**
**பறந்து உழன்றே தடுமாறிப்பொன்**
**தேடி அப்பாவையர்க்கீந்து**
**இறந்திடவோ பணித்தாய் இறை**
**வா கச்சி ஏகம்பனே**

**(திருஏகம்பமாலை : 30)**

என்னும் பாடலால் உணரமுடிகின்றது.

**செல்வம் நிலையாமை**

மனித வாழ்வின் அடிப்படைச் செழுமைக்கு ஆணிவேராக அமைவது செல்வமாகும். கல்வி, விளையாட்டு, திருமணம், குழந்தை, வீடுவாசல், சுற்றுப் பயணம் எனப் பிறப்பு முதல் இறப்பு வரை பணத்தின் அளப்பறிய பங்கை மறுப்பதற்கியலாது. பணத்தை ஓடி ஓடி, தேடி தேடி, நாடி நாடி சேர்க்கும் குலாமருக்கு இறுதியில் கிடைக்கும் பதில் என்னவோ அஃது இறுதி வரை வாராது என்பதே; இத்தகைய செல்வத்தைத் தேடும் நோக்கில் சகல செல்வங்களையும் தொலைத்து வாழ்க்கை என்னும் செல்வத்தை விரயமாக்கும் பேதை மக்களைப் பட்டினத்தார் கடிகின்றார். இக்கருத்து திரு ஏகம்ப மாலையின் ஏழாவது பாடலில் அமைந்திருக்கக் காணலாம்.

**பிறக்கும் பொழுது கொடுவந்தது**
**இல்லை பிறந்து மண்மேல்**
**இறக்கும் பொழுது கொடுபோவது**
**இல்லை இடைநடுவில்**
**குறிக்கும் இச்செல்வம் சிவன்தந்தது**
**என்று கொடுக்க அறியாது**
**இறக்கும் குலாமருக்கு என்சொல்லு**
**வேன்கச்சி ஏகம்பனே**

**(திருஏகம்பமாலை : 7)**

இருப்பதை வைத்து, கிடைப்பதைப் பெற்று வாழ்க்கைக்குத் தேவையான அளவு பணம் ஈட்டி பிறருக்குத் தீங்கிழைக்காது தாய் தந்தையோடும் மனைவி மாக்களொடும் இன்புற வாழ்வதே நன்மையைப் பயக்க வல்லது என்பதே இங்குக் கிடைக்கப்பெறும் செய்தியாகும்.

**புலனடக்கம்**

அறுபத்து மூன்று நாயன்மார்கள், பன்னிரு ஆழ்வார்கள், பதினெண் சித்தர்கள் மற்றும் பல்வேறு ஞானிகள் வலியுறுத்திய முக்கிய ஒன்று புலனடக்கமாகும். உயிரும் உடலும் கூடிவாழும் இவ்வாழ்க்கையில் மாய இன்பத்தைத் திரையாக்கி, மனநிலையைச் சேதமாக்கி, தீயப்பழக்கத்தை இயல்பாக்கி, வாழ்வியலைச் சூன்மயமாக்க ஐம்புலன்கள் காரணமாக அமைகின்றன. இத்தகைய புலன் இச்சையை ஒரு முறை துய்த்த பின்னரும் அதிலிருந்து விடுபட முடியாது மீண்டும் மீண்டும் அதை நல்கிச் செல்லும் இத்துர்புத்தியைப் பட்டினத்தார் சாடுகின்றார். பிறந்து இறந்து, பிறந்து இறந்து பல்வேறு பிறவிகளை அனுபவித்த பின்னரும் ஒரு துளிக்கூட மேன்மை பெறாதிருக்கும் இம்மனநிலையை எண்ணி அவர் வருந்துகிறார். இக்கருத்து,

**வருந்தேன் பிறந்து பிறந்து**
**மயக்கும் புலன் வழிப்போய்ப்**
**பொருந்தேன் நரகில் புகுகின்றிலேன்**
***(தலங்களைப் பற்றிய பாடல்கள்: கயிலாயம் : 8)***

என்ற பாடலின் மூலம் தெள்ளிதின் காணமுடிகிறது. முடிவில்லா நரகப் பாதையைப் பரிசளிக்கும் இவ்வைம்புலனின் செயல்பாட்டை மடைமாற்றம் செய்து அதனை நல்வழிப்படுத்தி உயிரை உன்னத நிலைக்குக் கொண்டு செல்லுதலே ஒவ்வொரு மனிதனின் தலையாயக் கடமை என்பதை இதன் மூலம் அறியலாம்.

**வாழ்நாளை வீணாக்குதல்**

ஆன்மா பரிபூர்ண நிலையை அடைவதற்கு அரியகளமாக அமைவது பூவுலக வாழ்க்கையாகும். இத்தாவரச்சங்கமத்துள் பிறப்பெடுத்த பல்வேறு வகை உயிரினங்களில் மனிதப் பிறவியே உயர்ந்தது என்பார் ஔவையார். இத்தகைய ஓர் உன்னத நிலையை உணராது ஐம்புலனுக்கு ஆட்பட்டு ஆசையில் மிதந்து, அறியாமையில் மூழ்கி உண்டவற்றையே உண்டும், உடுத்தியவற்றையே உடுத்தியும், உரைத்தவற்றையே உரைத்தும், கண்டவற்றையே கண்டும், கேட்டவற்றையே கேட்டும் வாழ்நாட்களை வீணாக்கியதை எண்ணிபட்டினத்தார் வருத்தம் கொள்கிறார். இச்செய்தி,

**உண்டதே உண்டும், உடுத்ததே உடுத்தும்**
**அடுத்து அடுத்து உரைத்ததே உரைத்தும்**
**கண்டதே கண்டும், கேட்டதே கேட்டும்**
**கழிந்தன கடவுள் நாள் எல்லாம்**
***(திருவெண்காட்டுத்திருவிசைப்பா : 3)***

நேரமும் காலமும் திரும்பப் பெற முடியாது என்பதால் செய்ய வேண்டிய கடமைகளையும் நற்காரியங்களையும் காலம் தாழ்த்தாது செய்திடுதல் அவசியமாகும்.

**பிறவிச்சுமையினால் அஞ்சுதல்**

பற்ற வேண்டிய பரம் பொருளைப் பற்றாது நீக்க வேண்டியமாயைகளைப் பற்றி நிலையில்லாத இவ்வாழ்வை நிஜமெனக் கருதுவதால் இருவினைகளும் நாலாப்பக்கமும் சூழ்கின்றன. வினைகளின் சேர்க்கையால் பிறவிகள் நேருகின்றன. ஒரு பிறப்பில் கிடைத்த தாயும் தந்தையும், மனைவியும் மாக்களும் மறுபிறப்பில் தொடர்வதில்லை. பூர்வப் புண்ணியப் பலன்களுக்கு ஏற்ப விகிதங்கள் குறைந்தும் கூடியும் வேறொரு கருவறையில் பிறப்பு நேர்கிறது. முற்பிறப்பின் நினைவும் இல்லை. ஆன்மாவின் அறிதலும் இல்லை. கதை மறுபடியும் முதலில் இருந்து தொடங்குகிறது. இவ்வாறாக பற்பல பிறவிகளை அனுபவித்து பிறந்து அடுத்தபடியாகப் பட்டினத்தார் கீழ்க்கண்ட பாடலைப் பாடுகிறார்.

**அன்னை எத்தனை எத்தனை அன்னையோ**
**அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ**
**பின்னை எத்தனை எத்தனை பெண்டிரோ**
**பிள்ளை எத்தனை எத்தனை பிள்ளையோ**
**முன்னை எத்தனை எத்தனை சென்மமோ**
**மூடன்ஆய் அடியேனும் அறிந்திலேன்**
**இன்னம் எத்தனை எத்தனை சென்மமோ**
**என்செய் வேன்கச்சி ஏகம்பநாதனே**
**(திருஏகம்பவிருத்தம் : 1)**

உலகியல் பற்றுகளைக் குறைத்து, அறத்தைச் செய்து, பரமான்மாவைத் துதித்து, இடைவிடாது அவனிடத்தே சரணடைந்தால் வாழ்வியல் பற்று அறுபடும் என்பது இங்குப் பெறப்படும் கருத்தாகும்.

## இறைவனே நிலையான உறவு

வாழ்க்கையில் கிடைக்கும் உறவுகள் யாவும் இறுதி வரை நிலைக்குமா என்றால் இல்லை என்றே சொல்ல வேண்டும். நிலையில்லா இவ்வாழ்வில் நிலையானது எது என்ற கேள்வியைத் தொடுத்து அதன் விடையைத் தேடிச் சென்றால் ஆதியும் அந்தமும் இல்லா அமேயனே நிலையான உறவு என்பது பெறப்படுகிறது. இருவினையால் நேரும் பிறவிப் பிணியானது பாரதப் போரைப் போல் காட்சியளிப்பினும் அதனை வெல்லுதல் மனிதக்குலக் கடமையாகும். பெற்றதாயும் பொன் பெற்றதாரமும் பெற்றெடுத்த பிள்ளையும் கடைசிவரை வாராதிருக்க, பற்றற்ற இறைவனே ஆன்மாவின் பதியாகப் புலப்படுத்தப்படுகிறார். இத்தகைய உலகியல் செய்தி,

**என்பெற்ற தாயரும் என்னைப்**
**பிணம்என்று இகழ்ந்துவிட்டார்;**
**பொன்பெற்ற மாதரும் போவென்று**
**சொல்லிப் புலம்பி விட்டார்;**
**கொன் பெற்றமைந்தரும் பின்வலம்**
**வந்து குடமுடைத்தார்;**
**உன்பற்று ஒழிய ஒருபற்றும்**
**இல்லை உடையவனே**
**(தலங்களைப் பற்றிய பாடல்கள்:பொது : 8)**

என்னும் பாடலின் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

## முடிவுரை

பட்டினத்தாரின் பாடல்களானது உலகியல் உண்மைகளை ஓங்கியுரைக்கும் கருத்துத் திரட்டு என்பது சித்தர் உலகு கண்ட பேருண்மையாகும். கிடைப்பதற்கரிய மானிடப் பிறவியில் நிலைபெற்றிருக்கும் நிலையாமைகளான வாழ்க்கை நிலையாமை, யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை மற்றும் பல்வேறு நிலையாமைகளைப் பட்டினத்தாரின் பாடல்கள் கொண்டு செழுமையுற அடையாளங்கண்டுள்ளது.

## துணை நூற்பட்டியல்

1. அழகர் நம்பி. 2016. *பட்டினத்தார் வாழ்வும் வாக்கும்*, சென்னை, திருமகள் நிலையம்.
2. கருப்பையா, பழ. 2012. *பட்டினத்தார் ஒரு பார்வை*. சென்னை, கிழக்கு பதிப்பகம்.
3. பரசுராமன், பி. என். 2010. *சித்தர்கள் வாழ்க்கை*, சென்னை, விகடன் பிரசுரம்.
4. பொன்மணிச் செல்வன், கு. 2014. *பட்டினத்தார் தத்துவம்*. சென்னை, அழகு பதிப்பகம்.
5. சசிரேகா, பா. *பட்டினத்தார் பாடல்களில் சித்தாந்தக் கொள்கைகள்*. தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ், 5(1), 38-47, 2022.
6. செந்தில்குமார், ச. சௌ. 2013. *பட்டினத்தார் வரலாறும் பாடல்களும்*. சென்னை, பாலாஜி பதிப்பகம்.
7. சேதுபிள்ளை, ரா. பி. 2007. *கடற்கரையிலே*. சென்னை, பழனியப்பா பிரதர்ஸ்.
8. சுப்பு ரெட்டியார், ந. 2003. *பட்டினத்தடிகள்*. சென்னை, கலைஞன் பதிப்பகம்.
9. தங்கவேல், தி. 2013. *சித்தர்களின் தத்துவ மரபு*. சென்னை, பாரதி புத்தகாலயம்.
10. திரு, வி.க. 2010. *பட்டினத்தார் பாடல்கள் விருத்தியுரை*. சென்னை, பழனியப்பா பிரதர்ஸ்.
11. வெங்டேசன், வி. எஸ். 2019. *பட்டினத்தார்*. சென்னை, சாந்திநிலையம்.